தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து

# ரத்த சகதியில் தமிழ்நாடு சிக்கியுள்ளது

மு.க.ஸ்டாலின் கண்டனம்



**சென்னை, அக்.8:** தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து, ரத்த சகதியில் தமிழ்நாடு சிக்கியுள்ளது, என மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை:

குற்றவாளிகள் தைரியமாகவும் பொதுமக்கள் அச்சத்தோடும் வாழும் சூழலுக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளதற்குச் சான்றாக கடந்த 24 மணி நேரத்தில் வெளியாகிய அதிர்ச்சி செய்திகள் அமைந்துள்ளன. சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். திருத்தணியில் தனது 17 வயது மகளுக்கு தொல்லை கொடுத்த நபர் மீது காவல் நிலையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால் இந்த கொலை நிகழ்ந்திருக்கிறது. சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த ஜனாபாய் எனும் மூதாட்டி பகலிலேயே கழுத்து நெரித்து கொலைசெய்யப்பட்டிருக்கிறார். கொலையாளிகள் அவரது நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமீன் கையெழுத்து போட்டு விட்டு திரும்பும்போதே வீரபத்திரன் என்பவர் மர்ம நபர்களால் மனைவியின் முன்பு வைத்து சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே மது போதையில் நிர்வாணமாக்கி வாலிபர் கொலை செய்யப்பட்டுள்ளார். சோழவந்தானில் டாஸ்மாக் கடை அருகே பைக்கில் வந்த சியாம் சுந்தர் ஜன் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

எண்ணூர் ரயில் நிலையத்திலேயே மாணவர்களை வெட்ட முயற்சி நடந்துள்ளது. வடக்கு, தெற்கு, மேற்கு, தலைநகர் என எல்லா திசைகளிலும் குற்றச் சம்பவங்கள் கொடி கட்டி பறக்கின்றன. பட்டப்பகல், நள்ளிரவு எனப் பாகுபாடு இல்லாமல் தமிழ்நாடு ரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது.

காவல்துறையினரால் ரோந்து பணி மேற்கொள்ளப்படுகிறதா இல்லையா?. சிங்கப்பெண் அதிரடிப் படையினர் ரீல்ஸ் போடுவதில் காட்டும் ஆர்வத்தை பெண்களின் பாதுகாப்பில் காட்டுவார்களா மாட்டார்களா?. காவல் நிலையத்தில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் புகார் தெரிவித்தவர்களே கொலைக்கு உள்ளாகும் அராஜகத்துக்கு முடிவு எப்போது?.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நாளாக, நாளாக மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. மக்களின் உயிரை காப்பதில் கவனம் செலுத்த வேண்டிய முதலமைச்சர் கவனம் மொத்தமும் தனது நாற்காலியைக் காப்பாற்றுவதிலேயே இருக்கிறது. அதற்கான விலையாக அப்பாவி மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு வருகின்றன. காவல்துறைக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர், சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்துவிட்டது. ஷூட்டிங் எண்ணத்திலிருந்து விடுபட்டு, தயவு செய்து நடவடிக்கை எடுங்கள் சிஎம் சார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாதவரம் ஆவின் பால் பண்ணையில்

# ரூ.2.23 கோடியில் புதிதாக ஆய்வக துணை கட்டிடம்




மாதவரம் மத்திய பால் பண்ணையை நேரில் ஆய்வு செய்த முதல்வர் விஜய், அங்கு காட்சிப்படுத்தப்பட்ட ஆவின் உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். அருகில், பால்வளத்துறை அமைச்சர் விஜயலட்சுமி, துறை செயலாளர் அனு ஜார்ஜ், இயக்குனர் சிவராசு மற்றும் அதிகாரிகள்.

## முதல்வர் விஜய் திறந்து வைத்தார்

**சென்னை, அக்.8:** மாதவரத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில், ரூ.2 கோடியே 23 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை முதல்வர் விஜய் நேற்று திறந்து வைத்தார்.

மாதவரம் பால் பண்ணை நிறுவனம், 1963ம் ஆண்டு அரசு மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் கூட்டு திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறனுடன் நிறுவப்பட்டது. இதன் உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு சுமார் 4.50 லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் பெற்றுள்ளது.

இந்திய தர நிர்ணய ஆணையம், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் தரநிலைகளின்படி குடிநீர் சோதனைகள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கழிவு நீர் சோதனைகள் செய்வதற்காக, சென்னை, மாதவரத்தில் ரூ.2 கோடியே 23 லட்சம் செலவில் அதிநவீன கருவிகளுடன் அமைக்கப்பட்டுள்ள ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணை கட்டிடத்தை முதல்வர் விஜய் நேற்று திறந்து வைத்தார்.

இந்த ஆய்வகமானது, நவீன உபகரணங்களின் உதவியுடன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தேவைகளுக்கான அனைத்து தர பரிசோதனைகளை துல்லியமாகவும், விரைவாகவும், சர்வதேச தரநிலைகளுக்கு இணங்கவும் மேற்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு சுமார் 4.50 லட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு, நுகர்வோரின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சராசரியாக 120 வாகனங்கள் மூலம் வடசென்னை பகுதிகளில் பால் விநியோக பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, மாதவரத்தில் நாளொன்றுக்கு 7 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை ரூ.152 கோடியே 26 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகளை முதல்வர் விஜய் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளின் முன்னேற்றம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்ததோடு, பணிகளை துரிதப்படுத்தவும் அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், பால் மற்றும் பால்வள மேம்பாட்டு துறை அமைச்சர் விஜயலட்சுமி, எம்எல்ஏ விஜய்பிரபு, செந்தில்குமார், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் அனு ஜார்ஜ், பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் சிவராசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குடிமகன்களால் தொல்லை விவகாரம்

# பொதுமக்களின் பாதுகாப்புக்கு எடுத்த நடவடிக்கை என்ன?

தமிழக அரசு பதில் தர ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, அக்.8:** சென்னையை சேர்ந்த சுரேஷ் என்பவர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், பெரம்பூரில் உள்ள தனது வீட்டின் அருகே அமைந்துள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்துபவர்களால் மிகுந்த தொல்லை ஏற்படுகிறது, என தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.செந்தில்குமார், வீட்டின் அருகில் இருக்கும் மதுக்கடையில் மது குடிப்பவர்களால் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதுவிலக்கு துறை செயலாளர் அறிக்கை தாக்கல்செய்ய வேண்டும்.

மக்கள் பாதுகாப்புக்கு எடுத்த நடவடிக்கை குறித்து துணை ஆணையர் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.


தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
EMPLOYEES' STATE INSURANCE CORPORATION
(Ministry of Labour & Employment, Govt of India)

Regional Office
143, Sterling Road, Nungambakkam, Chennai-600 034.
Phone: 044-28306300 (100 Lines)
E-mail: rd-tamilnadu@esic.gov.in
Website: www.esic.gov.in / www.rotamilnadu.esic.gov.in

**NOTICE INVITING EXPRESSION OF INTEREST (EOI) FOR EMPANELMENT OF HEALTH CARE ORGANIZATIONS (HCOs) (HOSPITALS/ DIAGNOSTIC LAB / IMAGING CENTRES / BLOOD BANKS) FOR PROVIDING "SUPER SPECIALTY TREATMENT AND INVESTIGATIONS" TO ESI BENEFICIARIES OF TAMIL NADU REGION.**

The Regional Director (I/c), Employees' State Insurance Corporation (ESIC), Regional Office, Chennai, invites Expressions of Interest (EOI) from 1. Central and State Government/PSU/Public Sector Hospitals, 2. PM-JAY empanelled Central and State Govt/PSU/Public Sector Hospitals, 3. CGHS empanelled Private Health Care Organizations (Hospitals, Diagnostic Centers, and Blood Banks), and 4. Private Health Care Organizations (Hospitals, Diagnostic Labs/Imaging Centers, and Blood Banks) located in Tamil Nadu and Puducherry to provide Super-Specialty treatment, diagnostic services, and Blood/Blood components on a cashless basis to the beneficiaries of the ESI Scheme. The empanelled Health Care Organizations will be paid at CGHS rates, terms and conditions as adopted by ESIC Headquarters Office from time to time.

The applicants can download EOI documents from the website www.esic.gov.in/tenders or www.eprocure.gov.in/eprocure/app. ESIC will reserve the right to accept or reject the any or all the EOIs without assigning any reasons whatsoever.

| Availability of EOI document in website | Last Date & Time for Submission of EOI document | Date & time for opening of EOI documents |
|---|---|---|
| 30.09.2026 | 21.10.2026, 3.00 PM | 21.10.2026, 5.00 PM |

Any queries in this regard may be addressed to **rd-tamilnadu@esic.gov.in** or **ssmc-tn@esic.gov.in**, or contact **044-28306326.**

Sd/-
Regional Director (I/C)
ESIC, CHENNAI, TAMIL NADU.


# ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு புதிய டெண்டர்

- மின்வாரிய ஊழியர்கள் எதிர்ப்பு
- தனியார்மய அச்சத்தால் சர்ச்சை

**சென்னை, அக்.8:** சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஸ்மார்ட் மின் மீட்டர்களை பொருத்துவதற்கான புதிய ஒப்பந்தப் புள்ளியை தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கோரியுள்ளது. இதற்கு மின்வாரிய தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

சென்னை தெற்கு 1 மற்றும் 2 ஆகிய மின்வட்டங்களில் அரசு கட்டிடங்கள், விவசாயம் மற்றும் குடிசை இணைப்புகளை தவிர்த்து குறைந்த மின்னழுத்த நுகர்வோருக்கு ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு முக்கிய நகரங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலும் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்டால், முன்கூட்டியே கட்டணம் செலுத்தி பயன்படுத்தும் முறை, நடைமுறைக்கு வரும். மின் கணக்கீட்டில் ஏற்படும் தவறுகளை குறைப்பதுடன், மின் திருட்டு மற்றும் மின் இழப்பை கண்டறிய உதவும்.

இந்நிலையில், ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தின் மூலம் மின் கணக்கீடு உள்ளிட்ட பணிகள் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக மின்வாரிய தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மின்வாரியத்தில் ஏற்கனவே பல்வேறு பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், அவற்றை நிரந்தரமாக நிரப்புவதற்கு பதிலாக தனியார் நிறுவனங்கள் மூலம் பணிகளை மேற்கொள்வது ஊழியர்களின் வேலைவாய்ப்பை பாதிக்கும் என்றும் தொழிற்சங்கங்கள் கூறி வருகின்றன.

மேலும், ஸ்மார்ட் மீட்டர் திட்டத்துக்காக மின்வாரியம் மேற்கொள்ளும் செலவு அதிகரிக்கும் என்றும், நிதிச்சுமையில் உள்ள மின்வாரியத்திற்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும் என்றும் ஊழியர் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. தனியார் நிறுவனங்கள் மூலம் மின் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டால், கணக்கீட்டில் தவறு ஏற்பட்டால் யார் பொறுப்பு ஏற்பது, நுகர்வோரின் மின் பயன்பாடு தொடர்பான தகவல்களின் பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப்படும் என்பன உள்ளிட்ட கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

தமிழகத்தில் சென்னை மட்டுமின்றி காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கோவை, ஈரோடு, கரூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட முக்கிய நகரங்களிலும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் மீட்டர் திட்டம் மூலம் மின் பயன்பாட்டை துல்லியமாக கணக்கிடுதல், மின் இழப்பு மற்றும் மின் திருட்டை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என மின்வாரியம் தெரிவிக்கிறது. அதேநேரத்தில், திட்டத்தின் செலவு, தனியார் நிறுவனங்களின் பங்கு, ஊழியர்களின் வேலைவாய்ப்பு மற்றும் முன்பணம் செலுத்தும் முறையால் நுகர்வோருக்கு ஏற்படும் மாற்றங்கள் குறித்து தொழிற்சங்கங்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருவது குறிப்பிடத்தக்கது.

# முதல்வர் விஜய்யுடன் ஒய்.எஸ்.ஷர்மிளா சந்திப்பு

**சென்னை, அக்.8 :** முதல்வர் விஜயை நேரில் ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஒய்.எஸ்.ஷர்மிளா சந்தித்து திருமண அழைப்பிதழை வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவரும், ஆந்திர முன்னாள் முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரியுமான ஒய்.எஸ்.ஷர்மிளா, தனது கணவர் அனில் குமாருடன் தமிழக முதல்வர் விஜயை நேற்று நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, ஷர்மிளா தனது மகள் ஒய்.எஸ்.அஞ்சலி ரெட்டி மற்றும் சோமலா ரகுராம் ரெட்டி ஆகியோரின் திருமணத்தையொட்டி முதல்வர் விஜய்க்கு நேரில் சந்தித்து அழைப்பிதழை வழங்கி திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.


செக்யூரிடிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இண்டரஸ்ட் சட்டம் , 2002 (தி ஆக்ட்) யின் 13(2) பிரிவின் கீழ் அறிவிப்பு

| வரிசை எண் | கடன் வாங்கியவர் (கள்) பெயர் (ஏ) | அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தின் விவரங்கள்/சொத்து (பி) | என்பிஏவின் தேதி (சி) | நிலுவையில் உள்ள தொகை (ரூ.) (டி) |
|---|---|---|---|---|
| 1. | கடன் கணக்கு எண். **HHLANN00248377** 1. பாலகிருஷ்ணன் ஜி 2. ஆர். புவனேஸ்வரி | ''விஜிஎன் ராயல்'' என்ற திட்டத்தில் அமைந்துள்ள, பிளாக்- ஏ, 4-வது தளத்தில் உள்ள ஏ-415 எண் கொண்ட ஃபிளாட்டில் உள்ள அனைத்தும், இதன் மொத்த பரப்பளவு 638 சதுர அடி (பொதுப் பகுதிகள் உட்பட) மற்றும் நிலத்தில் 243 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு ஆகியவற்றை உள்ளடக்கியது; அத்துடன் ஒரு மூடப்பட்ட கார் நிறுத்தும் வசதி கொண்டது, இத்திட்டம் பின்வரும் புல எண்கள் 7/1, 7/2 ஏ1 பகுதி, 21/2, 21/3, 22/2ஏ, 22/2பி, 22/2சி, 24, 25/1, 25/2, 26/1, 26/2 பகுதி, 27, 28/2ஏ, 35/5ஏ பகுதி, 35/5பி, 35/6, 36 மற்றும் அதற்கேற்ற டவுன் சர்வே எண்கள் 11/1, 11/12, 18/2, 18/3, 18/16, 18/17 மற்றும் 19/1, பிளாக் எண் 21 கொண்ட நிலங்களில் கட்டப்பட்டுள்ளது; விலிஞ்சியம்பாக்கம் கிராமம், பூவிருந்தவல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 600042, தமிழ்நாடு. | **08.11.2019** | ரூ. **34,31,221.76/-** (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து முப்பத்து ஒரு ஆயிரத்து இருநூற்று இருபத்து ஒன்று மற்றும் எழுபத்தாறு பைசா மட்டும்) **14.08.2026** தேதியின்படி |
| 2. | கடன் கணக்கு எண். **HLAPVLC00308110** 1. பி. பாலவிஜய் (உரிமையாளர்) ஹை-ரெவ் ஆட்டோமோட்டிவ்ஸ் 2. எஸ். வனிதா என்ற வனிதா 3. பாலசுப்ரமணி என்ற ஏ. பாலசுப்ரமணி | சொத்து எண் - 1<br>495.65 சதுர அடி பரப்பளவு கொண்ட ஃபிளாட் சென்னை-600024, கோடம்பாக்கம், டிரஸ்ட் புரம், 1-வது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 'ஓம் முருகா அப்பார்ட்மெண்ட்ஸ்' என்ற கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள எண் 2-பி ஆகிய அபார்ட்மெண்டுகள் மற்றும் அதனுடன் ஒரு மூடப்பட்ட கார் நிறுத்துமிடம்; மேலும், புலையூர் கிராமம், புல எண் 1272, டி.எஸ். எண் 29, பிளாக் எண் 25 ஆகியவற்றில் அடங்கியுள்ள, 4717 சதுர அடி நிலப்பரப்பில் 6.53% பிரிக்கப்படாத நில உரிமைப் பங்கு (பிளாட் எண் 18; பழைய எண் 8; புதிய கதவு எண் 16 - 10.03.2003 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தின்படி புதிய எண் 15; சொத்து வரி செலுத்திய ரசீதின்படி தற்போதைய கதவு எண் 15/7); இச்சொத்து கோடம்பாக்கம் சார்-பதிவாளர் மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.<br>சொத்து எண் - 2<br>870.48 சதுர அடி பரப்பளவு கொண்ட ஃபிளாட் சென்னை-600024, கோடம்பாக்கம், டிரஸ்ட் புரம், 1-வது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 'ஓம் முருகா அப்பார்ட்மெண்ட்ஸ்' என்ற கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள எண் 2-ஏ ஆகிய அபார்ட்மெண்டுகள் மற்றும் அதனுடன் ஒரு மூடப்பட்ட கார் நிறுத்துமிடம்; மேலும், புலையூர் கிராமம், புல எண் 1272, டி.எஸ். எண் 29, பிளாக் எண் 25 ஆகியவற்றில் அடங்கியுள்ள, 4717 சதுர அடி நிலப்பரப்பில் 10.43% பிரிக்கப்படாத நில உரிமைப் பங்கு (பிளாட் எண் 18; பழைய எண் 8; புதிய கதவு எண் 16 - 05.03.2003 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தின்படி புதிய எண் 15; சொத்து வரி செலுத்திய ரசீதின்படி தற்போதைய கதவு எண் 15/7); இச்சொத்து கோடம்பாக்கம் சார்-பதிவாளர் மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. | **24.01.2020** | ரூ. **2,40,85,786.11/-** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பது லட்சத்து எண்பத்தைந்து ஆயிரத்து எழுநூற்று எண்பத்தாறு மற்றும் பதினொரு பைசா மட்டும்) **14.08.2026** தேதியின்படி |

மேலே குறிப்பிட்ட பெயர் கொண்ட கடன் வாங்கியவர்(கள்) கடன் கணக்கில் நிதி ஒழுக்கத்தை பராமரிக்கத் தவறி விட்டனர். மேலும் நிறுவனத்தின் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் படி பராமரிக்கப்பட்ட கணக்குப் புத்தகங்களின்படி டி பத்தியில் நிலுவையில் உள்ள தொகையைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் தொகையை திருப்பி செலுத்துவதில் கடன் வாங்கியவர்(கள்) தரப்பில் தொடர்ந்து தவறியதால் கடன் வாங்கியவர்(கள்) கடன் கணக்கை நிறுவனமானது ஒழுங்குமுறை ஆணையம் சொத்துக்களை (பத்தி சி-யில் குறிப்பிட்ட தேதியின்படி) வகைப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டி விதிகளின்படி செயல்படாத சொத்தாக காட்டியுள்ளது. அதைத் தொடர்ந்து பிரிவு13(2)-ன் கீழ் ஒவ்வொரு கடன் வாங்கியவர்களுக்கும் நோட்டீஸ்கள் அனுப்பபட் பட்டுள்ளன.

மேற்கண்டவைகளை மனதில் கொண்டு மேலே குறிப்பிட்ட கடனாளிகள் தாங்கள் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய, பத்தி-டி-யில் குறிப்பிட்டப்பட்டுள்ள முழுத் தொகையையும் நாளது தேதி வரை, வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உட்பட இந்த அறிவிப்பு வெளியாகும் தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தங்கள் பொறுப்பில் செலுத்தும்படி நிறுவனமானது கேட்டுக்கொள்கிறது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் நிறுவனமானது பத்தி பி-யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அடமானமாக வைத்த சொத்துக்களை எடுத்துக் கொண்டு நிறுவன சட்டத்தில் உள்ளபடி பிற நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமை கொண்டுள்ளது.

தயவுசெய்து சர்ஃபேசி சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப் பிரிவின் (8) விதிமுறைகளை கவனிக்கவும், ''பொது ஏலம், ஏல கேள்விகளை வரவழைத்து, பொது ஏலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலமாக ஜாமீனாக பெறப்பட்ட சொத்தை(களை) விற்பனை செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதி வரை மட்டுமே ஜாமீனாக பெற்ற கடன் வழங்குபவருக்கு ஏற்பட்ட கட்டணங்கள் மற்றும் செலவுகள், அனைத்து செலவுகளுடன் ஒன்றாக நிலுவையில் உள்ள மொத்த தொகையையும் கடன் பெற்றவர் செலுத்தலாம். மேலும், சட்டப்பூர்வமான பரிந்துரைக்கப்பட்ட கால வரம்புக்குள்ளாக கடன் பெற்றவர் ஜாமீனாக பெற்ற சொத்தை மீட்டுப் பெறத் தவறும்பட்சத்தில், கடன் பெற்றவருக்கு சொத்தை மீட்டுப் பெறும் உரிமையை இழந்து விடலாம் என்பதும் குறிப்பிடத் தக்கது''

சர்ஃபேசி சட்டத்தின் 13-ம் பிரிவு துணைப் பிரிவின் (13) விதிமுறைகளைப் பொறுத்தவரை, நீங்கள் கடன் வாங்கியவர்கள் நிறுவனத்திடம் முன்கூட்டி எழுத்தின் மூலம் அனுமதி வாங்காமல் இந்த அடமான சொத்துக்களை கைமாற்றுதல், விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வழியில் (வழக்கமான தொழில்முறையில் செய்வது தவிர) வேறு ஏதேனும் செய்யக்கூடாது என்று இதன் மூலம் தடை விதிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
அஸ்ஸெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட்-க்காக
(ஆர்சில் சிபிஎஸ்-IV-அறக்கட்டளையின் அறங்காவலர்)

இடம் : திருவள்ளூர்/சென்னை



OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**
CIN No.U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194/ +91 98840 62068/ +91 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]

**அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு**

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, M/s. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 30/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) M/s.இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட் (ஐபிஎல்) (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 11.01.2022 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகளை நேரடி சுவாதீனம் செய்துள்ளார். ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு: ஏலத்தில் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுவது என்னவென்றால்: சித்தார்த் ஹைட்ஸ் அபார்ட்மெண்ட் உரிமையாளர்கள் சங்கம் அளித்துள்ள தகவலின்படி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உரிமையாளர்களிடமிருந்து சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் (மாதாந்திரப் பராமரிப்புக் கட்டணம், தாமதக் கட்டணம் மற்றும் கட்டிடப் பழுதுபார்ப்பு நிதி) மற்றும் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய பராமரிப்புக் கட்டணம், தாமதக் கட்டணம் போன்றவை உட்பட, 30.07.2026 தேதியின்படி மொத்தம் ரூ.4,58,560 (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று அறுபது மட்டும்) பாக்கி உள்ளது. வெற்றி பெற்ற ஏலதாரர், ஒஏஆர்பிஎல் நிறுவனத்திடமிருந்து சொத்தின் நேரடி உடைமையைப் பெறுவதற்கு முன்னர், சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தி, அவரிடமிருந்து நிலுவை இல்லை என்ற சான்றிதழைக் கீழே கையொப்பமிட்டவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**கடன்தாரர் & உப கடன்தாரர் பெயர்:** M/s. டீஸ்லி டெலிமேடிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (கடன்தாரர்) மற்றும் (B) திரு. K.வெங்கடேஸ்வரன் கருப்பணன், த/பெ, திரு.கருப்பணன் மற்றும் திருமதி.மணிமேகலை சிவப்பிரகாசம், க/பெ, திரு. K.வெங்கடேஸ்வரன் கருப்பணன் (கடன்தாரர்கள்), திரு. K.ரமேஷ், த/பெ, திரு.கருப்பணன் (உப கடன்தாரர்)

**கடனீட்டு சொத்தின் விவரங்கள்:** விருகம்பாக்கம் சார் பதிவு அலுவலகம், 21.10.2002 விற்பனை பத்திர எண்.5244/2002 மற்றும் 21.10.2002 தேதியிட்ட கட்டுமானதாரர் ஒப்பந்தத்தின்படி திரு. K.வெங்கடேஸ்வரன், த/பெ, திரு. கருப்பணன் மற்றும் திருமதி.மணிமேகலை, க/பெ, திரு. K.வெங்கடேஸ்வரன் ஆகியோருக்குச் சொந்தமான சொத்து.

**அட்டவணை A :** மனை எண்கள்.1,2,3,4,5 & 6,பங்காரு தெரு, சாலிகிராமம் மற்றும் பழைய சர்வே எண். 116/1 பகுதி மற்றும் புதிய T.S.No.179/1, பிளாக் எண்.42, எழும்பூர்– நுங்கம்பாக்கம் வட்டத்தில் உள்ள 43626 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உடைய சொத்து. எல்லைகள்: வடக்கில்: T.S.No.97&179/2 (பிளாக் எண்.40), தெற்கில்: T.S.No.179/1 இன் பகுதி, கிழக்கில்: T.S.No.180, மேற்கில்: பங்காரு தெரு. சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

**அட்டவணை B:** அட்டவணை "A" இல் உள்ள பாகம் பிரிக்கப்படாத பங்கு 454 சதுர அடி நிலம் உள்ள சொத்து.

**அட்டவணை C:** மேலே விவரிக்கப்பட்ட அட்டவணை A சொத்தில் , கட்டுமான பரப்பு 1320 ச.அடி உள்ள பிளாட் எண்.பி2, இரண்டாவது தளம், பிளாக் எண்.1, சித்தார்த் ஹைட்ஸ் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சொத்து.

**சொத்து உரிமையாளர்** திரு. K.வெங்கடேஸ்வரன் கருப்பணன், த/பெ, திரு.கருப்பணன் மற்றும் திருமதி.மணிமேகலை சிவப்பிரகாசம், க/பெ, திரு. M.வெங்கடேஸ்வரன் கருப்பணன்

| 13(2) அறிவிப்பு நாள் | நேரடி சுவாதீனம் நாள் | 08.10.2026 தேதியின்படி நிலுவைத் தொகை கடன்தாரர் (A) மற்றும் (B) ஆகிய இரண்டு கடன் கணக்குகளும் சேர்த்து மொத்தம் |
|---|---|---|
| 24.06.2021 | 06.12.2025 | ரூ.2,34,99,866/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து நான்கு லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஆறு மட்டும்) |

| நிர்ணய விலை: ரூ.1,06,00,000/– | முன்வைப்புத் தொகை– நிர்ணயவிலையில் 10% | ஏலம் உயர்த்தும் தொகை | சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: |
|---|---|---|---|
| (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சம் மட்டும்) | ரூ. 10,60,000/– (ரூபாய் பத்து லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) | ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) | அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |

**கணக்கு விவரங்கள்:** கணக்கு எண்.055505010221, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 30/2021–22 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பந்த்ரா கிழக்கு மும்பை, IFSC Code:ICIC0000555

| மின்–ஏலம் நாள் & நேரம் | ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் |
|---|---|
| 19 நவம்பர் 2026 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை. | 17 நவம்பர் 2026 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக |

**ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை:** விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் மின்னணு ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடத்துவது குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கும்.

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 09.10.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்கு அறிவுறுத்தும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(V.M.திவாகரன்)
கைபேசி எண். 9962333307
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 30/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது

நாள்: 08.10.2026
இடம்: சென்னை